# சாதாரணக்கூட்டம்

கோயம்புத்தூர் மாவட்டம், கூடலூர் நகராட்சி சாதாரணக் கூட்டம் 13.02.2023 ஆம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து பரிசீலித்து முடிவு செய்யப்படும். துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் மேற்கண்ட சாதாரணக் கூட்டத்தில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை :–**

1. திரு.அ.அறிவரசு அவர்கள், தலைவர், கூடலூர் நகராட்சி
2. திரு.கி.பால்ராஜ் அவர்கள், ஆணையாளர்(கூ.பொ), கூடலூர் நகராட்சி

**பொருள் எண்:01**

அரசாணை எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.01.2023ன்படி கூடலூர்(கோ) நகராட்சியில் அம்ரூத் 2.0– 2022–2023ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணியை மேற்கொள்ள மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 க.ச.எண்.610 பாலாஜி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல். | 41.00 |
| | மொத்தம் | 41.00 |

**பொருள் எண்:02**

கூடலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.33522/2022/EA-2SWM17, நாள்.10.01.2023ன் படி, திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளான வீடு வீடாக மக்கும் மற்றும் மக்காத கழிவுகள் சேகரம் செய்வது, வணிக நிறுவனங்களில் கழிவுகள் சேகரம் செய்வது போன்ற பணிகளை தனியார் சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள உரிய வழிகாட்டுதலுடன் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Name of the Municipality | Quantity of Waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated Base cost per Day (Rs.in Lakhs) | Estimated Base Cost per Year (Rs.in Lakhs) | Applicable GST 18% and LWF 1% (Rs.in Lakhs) | Estimated Total Cost per Year (Rs.in Lakhs) | Estimated Total Cost Three Year (Rs.in Lakhs) |
|---|---|---|---|---|---|---|---|
| Gudalur(CBE) | 15.85 | 5043.68 | 0.80 | 292.00 | 55.48 | 347.48 | 1042.44 |

மேலும் நகராட்சியின் வாகனங்களை வாடகை அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும், நாளொன்றுக்கான வாடகை நிர்ணயம் செய்தும், அதனை மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Category | Available Vehicle Nos | After ULB use available for Rent | Rent fixed per Day | Collectable rent per Day |
|---|---|---|---|---|---|
| 1 | Pushcart | 32 | 30 | 10 | 300 |
| 2 | LCV | 2 | 2 | 200 | 400 |
| 3 | HCV | 2 | 0 | 400 | 0 |
| **Total** | | **36** | **32** | | **700** |

மேலும், தற்போது நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிகளின் விபரம் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Activity | No of Permanent Sanitary Worker assigned | Type | HCV |
|---|---|---|---|
| Bushes Removal | 3 | HCV | 1 |
| Road side earth removal | 1 | | |
| For drain cleaning | 6 | | |
| For Street Sweeping only | 5 | HCV | 1 |
| **TOTAL** | **15** | | **2** |

மேலும் தனியார் ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Description of the Activity | Nos |
|---|---|---|
| 1 | Door to Door Collection of segregated waste from Households using BOV and Handover the waste to processing center / Handling facilities. | 9300 Household |
| 2 | Door to Door of segregated waste from Households using LCV and Handover the waste to processing center / Handling facilities. | 6360 Household |
| 3 | Door to Door collection of segregated waste in small size Commercial Establishment using Low Commercial Vehicle and handover the waste to processing center / handling facilities. | 890 Commercial establishment |
| 4 | Sweeping the Bus Route Roads on daily basis and handover the waste to processing center / handling facilities | 5.00 KM |

மேற்கண்டவாறு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளின்படி தனியார் சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கு மூன்று வருடங்களுக்கு ஆகும் செலவினங்களையும் மற்றும் தனியார் நிறுவன சேவை கட்டணம் போன்ற இது தொடர்பான இதர செலவினங்களுக்கும் நகராட்சி பொது நிதி மற்றும் 15வது நிதிக்குழு SBM Tied Grant நிதிகளிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:03**

கூடலூர் நகர்மன்றத் தீர்மான எண்.185 நாள்.30.01.2023ன் படி, 15வது நிதிக்குழு மான்யம் Tied Grant 2021–22ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 08.02.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 வி.கே.வி நகர் பகுதியில் நுண் உரம் செயலாக்கம் மையம் அருகில் சுற்றுச்சுவர் (205 மீ X 1.60மீ) அமைத்தல். | 22.00 | திருமதி.பிரேமாவதி, ஒப்பந்ததாரர் | 1.23% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | தி/வா.கனலி கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் | –0.10% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **தி/வா.கனலி கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரருக்கு** பணி ஆணை வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:04**

கூடலூர் நகர்மன்றத் தீர்மான எண்.189 நாள்.30.01.2023ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2021–2022ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 03.02.2023 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.08 காமராஜ் நகர் அரிசன காலனி (SC) பட்டத்தரசியம்மன் கோவில் பின்புறம் வடிகால் மற்றும் கல்வெட் கட்டும் பணி மேற்கொள்தல். | 9.80 | திரு.டி.ராஜ்குமார், ஒப்பந்ததாரர் | –0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.பிரேமாவதி , ஒப்பந்ததாரர் | 1.19% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | வார்டு எண்.01 அம்சி நகர் அரிசன காலனி (SC)யில் கான்கிரீட் சாலை அமைத்தல். | 7.50 | திரு.டி.ராஜ்குமார், ஒப்பந்ததாரர் | –0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.பிரேமாவதி , ஒப்பந்ததாரர் | 1.19% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | வார்டு எண்.08 காமராஜ் நகர் அரிசன காலனி(SC) யில் கான்கிரீட் சாலை அமைத்தல். | 5.80 | திரு.டி.ராஜ்குமார், ஒப்பந்ததாரர் | -0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருமதி.பிரேமாவதி , ஒப்பந்ததாரர் | 1.20% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.டி.ராஜ்குமார், ஒப்பந்ததாரருக்கு** பணி ஆணை வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:05</u>**

கூடலூர் நகராட்சியில் கீழ்க்கண்ட வார்டுகளில் பொதுமக்களின் அவசர அத்தியாவசியம் கருதி, பொதுநிதி 2022-23ன் கீழ் தெருவிளக்குகள் பணி மேற்கொள்ள நகர மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர் | பணி விபரம் |
|---|---|---|---|
| 1 | 1 | அலங்கார் நகர் | ஒரு எண்ணிக்கையில் மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் மற்றும் 6 எண்ணிக்கையில் மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 2 | 10 | முருகன் நகர் | 9 எண்ணிக்கையில் மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 3 | 18 | லட்சுமிபுரம் | 26 எண்ணிக்கையில் மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 4 | 22 | பாரதி நகர் | 6 எண்ணிக்கையில் மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல். |

**<u>பொருள் எண்:06</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் பட்டியலில் 2016-2017ஆம் ஆண்டிற்கு முன்பு போடப்பட்ட சாலைகளில் சேதமடைந்த சாலைகளை புதுப்பித்தல் செய்ய, NSMT 2022-23 திட்டத்தின் கீழ், கூடலூர் நகராட்சியில் 6.00 கி.மீ நீளத்தில் சாலைகளை புதுப்பிக்க ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து உரிய இடங்களில் சாலைப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் எண்:07</u>**

கூடலூர் நகராட்சியில் கீழ்க்கண்ட வார்டுகளில் பொதுமக்களின் அவசர அத்தியாவசியம் கருதி, பொதுநிதி 2022-23ன் கீழ் தெருவிளக்குகள் பணி மேற்கொள்ள நகர மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர் | பணி விபரம் |
|---|---|---|---|
| 1 | 2 | கணபதி நகர் | 8 எண்ணிக்கையில் மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 2 | 8 | அஜந்தா நகர் | 10 எண்ணிக்கையில் மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 3 | 24 | முல்லை நகர் | 6 எண்ணிக்கையில் மின்கம்பங்களுக்கு மின்கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல். |
| 4 | 5 | கணேஷ் நகர் | 2 எண்ணிக்கையில் மின்கம்பத்துடன் கூடிய தெருவிளக்கு அமைத்தல். |

**<u>பொருள் எண்:08</u>**

கூடலூர் நகராட்சியில் 2022–23 பொதுநிதியின் கீழ் கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.27 பத்மாவதி நகரில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு மூடி அமைத்தல். | 3.50 |
| 2 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 இராமர் கோயில் வீதியில் வடிகால் அமைத்தல். | 6.30 |
| 3 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 ஜீவா நகர் விநாயகர் கோயில் முதல் ஆர்.வி நகர் பள்ளம் வரை வடிகால் அமைத்தல். | 6.30 |
| 4 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 சாமையன் நகர் பகுதியில் வடிகால் அமைத்தல். | 7.80 |
| 5 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 08 பிரிக்கால் நகரில் அமைந்துள்ள கிணற்றை தூர்வாரி சுத்தம் செய்து மின்மோட்டர் அமைத்தல். | 3.00 |
| 6 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 09 அங்காளம்மன் புரம் பகுதியில் பழுதடைந்த வடிகால் சீரமைத்தல். | 3.00 |
| 7 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 தெக்குப்பாளையம் பகுதியில் 100 மீட்டர் அளவுக்கு சேதமடைந்த வடிகால்களை புதுப்பித்தல் மற்றும் 50 மீட்டர் அளவுக்கு வடிகால்களின் மேல் கான்கிரீட் மூடி அமைத்தல். | 6.00 |
| 8 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 தெக்குப்பாளையம் பகுதியில் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையத்தில் தரைமட்டத் தொட்டி, கழிவு நீர்த் தொட்டி மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல். | 7.00 |
| 9 | கூடலூர் நகராட்சி அலுவலகத்திற்கு புதியதாக ஜெனரேட்டர் கொள்முதல் செய்தல். | 5.00 |
| 10 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 ஆர்.வி நகர் பகுதியில் வடிகால் அமைத்தல். | 9.80 |
| 11 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 வீரபாண்டி பிரிவு செல்லும் சாலையில் உள்ள வடிகாலுக்கு மூடி அமைத்தல் மற்றும் பராமரித்தல். | 4.50 |

| | | |
|---|---|---|
| 12 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 பஜனை கோவில் அருகில் உள்ள வடிகால் பராமரித்தல். | 1.50 |
| 13 | 15 வது நிதிக்குழு மான்யத்தின் கீழ் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 02 வட்டப்பாறைபுதூர் பகுதியில் ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைத்து முடிக்கப்பட்ட பணியில் ஜனனி கார்டன் பகுதியில் விரிவுபடுத்தி தார்சாலை அமைத்தல். | 7.50 |
| 14 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 வஞ்சிமா நகர் மேற்கு முதல் மற்றும் இரண்டாவது குறுக்கு சாலைகளில் வடிகால் அமைத்தல். | 9.20 |
| 15 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 லட்சுமி கல்யாண மண்டபம் முதல் பாலு கார்டன் நுழைவாயில் வரை வடிகால் அமைத்தல். | 8.20 |
| 16 | கூடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 சாமிசெட்டிபாளையம் பாலம் அருகில் தடுப்பு சுவர் மற்றும் வடிகால் அமைத்தல். | 3.60 |
| | **மொத்தம்** | 92.20 |

ஒம்/- அ. அறிவரசு
நகர்மன்ற தலைவர்,
கூடலூர் நகராட்சி,
கோயம்புத்தூர்–47.

**13.02.2023 அன்று நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்**

| **பொருள் எண்** | **தீர்மான எண்** | **தீர்மானம்** |
|---|---|---|
| 1 முதல் 8 முடிய | 192, 193, 194, 195, 196, 197, 198, 199 | அங்கீகரிக்கப்படுகிறது. |

ஒ.ம்/ திரு.அ.அறிவரசு,
தலைவர்
கூடலூர் நகர்மன்றம்
கோயம்புத்தூர்.

**//உண்மை நகல் //**

21/11/2023

ஆணையாளர்(கூ.பொ)
கூடலூர் நகராட்சி
கோயம்புத்தூர்–47

21.11.2023